# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## Pr.O.P.No. 80/2023

சாட்சி : PW– 2
பெயர் : திரு. செல்லதுரை தேதி : 25.09.2024

**குறுக்குவிசாரணை** :– (3ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் சொல்லி நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்தேன். முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நீதிமன்றத்திற்கு வந்து தெரியும் என்றால் எனக்கு முன்னரே தெரியும். முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் நீதிமன்றத்தில் வைத்து நான் கையெழுத்து போட்டேன். நான் சொல்லி முதல்விசாரணை பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளை வழக்குரைஞர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

1ம் எதிர்மனுதாரர் சக்திவேல் என்னுடைய நண்பர் என்றால் 1ம் எதிர்மனுதாரரின் அப்பா மூலமாக எனக்கு பழக்கம். உயில் எந்த மூல ஆவணங்களை பார்த்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. ம.சா.ஆ.–6ல் யாருக்கு எத்தனை குழந்தைகள், உயில் எழுதிய நபருக்கு எத்தனை குழந்தைகள் என்று குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். ம.சா.ஆ.–6க்கான முத்திரை தாள் யார் பெயரில் என்றைக்கு வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அதில் சொத்து விவரங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் 550 சதுர அடி குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குரைஞர் ரவிச்சந்திரன் தயார் செய்தார். அவர் பொன்னம்மாபேட்டையை சேர்ந்தவர். அதை பழனியப்பன் தட்டச்சு செய்தார்.

ம.சா.ஆ.–6 உயில் நான் வீட்டில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. சுப்பாராவ் நோட்டரி வக்கீல் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். 5ம் தேதி ராமு என்பவர் போன் செய்து தான் உயில் எழுத போகுமாறும், 6ம் தேதி வருமாறும் சொன்னார். மனுதாரர் சொத்துக்காக மனு

தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. ராமு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. ராமு என்பவர் எல்லா விசயங்களையும் என்னிடம் சொல்ல மாட்டார். சிலவற்றை கூறுவார். ராமு என்பவரின் பெண் மக்களை ஆத்தூர் மற்றும் நாமக்கல் குமாரபாளையத்தில் திருமணம் செய்துகொடுத்துள்ளார். அவர்களது கணவர் பெயர் தெரியாது. எத்தனை குழந்தைகள் என்று தெரியாது. 07.05.2021ல் ராமு இறந்துவிட்டார். ராமுவின் இறப்பிற்கு யார் யார் கலந்துகொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. பெண் மக்கள் வந்தார்களா என்று எனக்கு தெரியாது.

உயில் எழுதிய பிறகு ராமுவே அதை எடுத்துச் சென்றார். 03.09.2024 ல் வாதி என்னை முதலில் சாட்சியம் சொல்ல அழைத்தார் என்றால் ஆமாம். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றும், பிரமாண வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.–6 ராமு இறந்த பிறகு போலியாக தயாரிக்கப்பட்டது. அது போலியான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. ராமு கருப்பு மையில் கையெழுத்து போட்டார். அவர் கையெழுத்து போட்ட வேற ஆவணங்களை நான் பார்த்ததில்லை. ம.சா.ஆ.–6ல் உள்ள கையெழுத்து ராமுவுடைய கையெழுத்து அல்ல என்று சொன்னால் என் முன்னிலையில் தான் கையெழுத்து போட்டார். 1ம் எதிர்மனுதாரர் தயாரித்து கையெழுத்து போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

நோட்டரி வழக்குரைஞர் உயில் பதிவு செய்யப்பட வேண்டுமா என்று என்னிடம் எதுவும் சொல்லவில்லை. பழனியப்பன் என்பவர் ஆவணத்தை தயார் செய்தார். அவர் தட்டச்சு செய்தார். ரவிச்சந்திரன், பழனியப்பன் ஒரே அலுவலகத்தில் உள்ளார்கள் என்றால் ஆமாம். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.